**DP/GIT/2025/01**

எனது எண்: 6/10/GIT/2025
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2025 மே மாதம் 30

guruwaraya.lk

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை – 2025

மேற்படி ஆண்டிற்குரிய பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2025 மே மாதம் 30 ஆம் திகதியிலிருந்து 2025 ஜுன் மாதம் 13 ஆம் திகதி வரை** விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் இச்சந்தர்ப்பம் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

1. **விண்ணப்பித்தல்**

நிகழ்நிலை முறைமையில் (online) மட்டும் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தவும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து "எமது சேவை" என்பதின் கீழுள்ள "Exam Information Centre" ஐ Click செய்த பின்னர் GIT – 2025 Students Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது https://onlineexams.gov.lk/eic ஊடாகவோ பிரவேசிக்கவும்.
- தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள School Code, Password ஐ உள்ளடக்கி முறைமைக்குள் நுழைக.
- உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்ட School Code, Password தொலைத்திருப்பின் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்க

2. 2025 ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி பயிலும் (2026 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.தர)த்தில் முதற்தடவையாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விண்ணப்பங்களில் மட்டும் உங்கள் கவனத்தை செலுத்தவும்.

3. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது பிழையின்றி சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தை எக்காரணத்திற்காகவேனும் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனால் முதற் சந்தர்ப்பத்திலேயே இவற்றைப் பிழையின்றிப் பூரணப்படுத்துதல் அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

4. தரவிறக்கம் செய்தல்

தரவிறக்கம் செய்த பின்னர் அச்சுப் பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தில் அதிலுள்ள சகல விவரங்களும் சரியானவை என உறுதிசெய்து விண்ணப்பதாரியிடம் கையொப்பம் பெற்றுக் கொள்வதுடன் அவசியமேற்படுமிடத்து மட்டும் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். நிகழ்நிலை முறைமைக்குள் தரவுகளை உள்ளடக்கிய பின்னர் தரவிறக்கம் செய்யப்பட்ட PDF பிரதியையும் உங்களால் தயாரிக்கப்பட்ட Excel கோவையையும் ஒப்பிட்டுப் பார்த்து சகல விண்ணப்பதாரிகளினதும் சகல விவரங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்வது அதிபர்களினதும் பொறுப்பாசிரியரினதும் முழுப்பொறுப்பாகும்.